15.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாடு முழுவதும் தக்காளி விலை கிடுகிடு உயர்வு



இந்தியா முழுவதும் தக்காளியின் விலை கடந்த 15 நாட்களில் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. தக்காளி அதிக அளவில் சாகுபடியாகும் கர்நாடகா, மத்திய பிரதேசம், ஆந்திரா, தெலுங்கானா, மேற்கு வங்காளம், ஒடிசா மாநிலங்களில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு உற்பத்தி குறைந்ததே விலை உயர்வுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

கொல்கத்தாவில் 2 வாரங்களுக்கு முன்பு ரூ.30-க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ தக்காளியின் விலை நேற்று ரூ.60 ஆக இருந்தது.

இதேபோல் மும்பையில் இந்த மாத தொடக்கத்தில் ஒரு கிலோ தக்காளி ரூ.38-க்கு விற்பனை ஆனது. இது நேற்று ரூ.58 ஆக அதிகரித்தது.

தில்லியில் நேற்று ஒரு கிலோ தக்காளியின் விலை ரூ.51 ஆக இருந்தது. மத்திய நுகர்வோர் விவகார அமைச்சக புள்ளி விவரப்படி, இந்த மாதத்தின் தொடக்கத்தில் தில்லியில் ஒரு கிலோ தக்காளி ரூ.25-க்கு விற்பனையானது என்பது குறிப்பிடத்தக்கது.

## "அத்திக்கடவு- அவிநாசி திட்டத்துக்கு பாண்டியாறு - புன்னம்புழா திட்டம் வழிவகுக்கும்'

அத்திக்கடவு- அவிநாசி திட்டத்தை நிறைவேற்ற பாண்டியாறு- புன்னம்புழா திட்டம் வழிவகுக்கும் என தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு செயலர் நல்லசாமி தெரிவித்தார்.

சென்னையில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

பாண்டியாறு- புன்னம்புழா ஆகிய ஆறுகள் நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகின்றன. அதன் பிறகு மேற்கு நோக்கி சாளியாற்றில் கலந்து அரபிக் கடலில் கலக்கின்றன.

14 டிஎம்சி: தமிழக- கேரள எல்லைப் பகுதியில் தடுப்பு அணை கட்டி கிழக்கு நோக்கி திருப்பினால் தமிழகத்துக்கு 14 டிஎம்சி நீர் கிடைக்கும். அதன்மூலம் அத்திகடவு - அவிநாசி திட்டத்தை எளிதாக நிறைவேற்ற முடியும். ஆனால், பவானி ஆற்றின் உபரி நீரைக் கொண்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் நீர் கிடைக்கும். ஆகவே, பாண்டியாறு - புன்னம்புழா திட்டத்தின் மூலம் கோவை, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு குடிநீர் தேவையும் பூர்த்தியாகும்.

பயனற்றுபோன 19,500 ஏக்கர்: திருப்பூர் சாயகழிவால் நொய்யல் ஆற்று ஓரத்துபாளையம் அணையும் கரூர் அரவகுறிச்சி தொகுதியில் உள்ள 19,500 ஏக்கர் விளைநிலமும் பயனற்று உள்ளன. இந்த விளைநிலங்களை பண்படுத்த பாண்டியாறு - புன்னம்புழா நீரை பவானிசாகர் அணையிலிருந்து 124 மைல் நீளம் கொண்ட கீழ் பவானி பாசனத்துக்கு திருப்பி விடலாம். மேலும் அங்கிருந்து கால்வாய் மூலம் அரவக்குறிச்சி அத்திபாளையம் அணை தேக்கத்துக்கு கொண்டு சென்று வெற்றிகரமாகச்

செயல்படுத்தலாம். அதன்மூலம், நிலம் கையகப்படுத்துவதை தவிர்க்கலாம். அதோடு, செலவினங்களும் குறைய வாய்ப்பு உள்ளது. மேலும், பாசனமும் மறுவாழ்வு பெறும், நீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும், காவிரி கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு வளம் சேர்க்கும். அதேபோல சென்னை வீராணம் ஏரிக்கு குடிநீர் பெறவும் இந்தத் திட்டத்தின் மூலம் வழிவகை செய்யலாம்.

எனவே, தமிழகத்திற்கு நீரும், கேரளத்துக்கு மின்சாரமும் தரும் இந்த திடடத்தை மத்திய அரசு நிதி மூலம் செயல்படுத்த முன்வர வேண்டும். பாண்டியாறு புன்னம் புழா இணைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், அது நாட்டின் நாட்டின் இறையாண்மைக்கும், ஒற்றுமைக்கும் வலு சேர்க்கும் என்றார்.

## கொப்பரைத் தேங்காய் கொள்முதல் இன்று தொடக்கம்: ஆட்சியர்

அரசு ஆதார விலைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து புதன்கிழமை முதல் கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்யப்படும் என மாவட்ட ஆட்சியர் தந.ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி:

தமிழக முதல்வரின் உத்தரவின்படி, அரசு ஆதார விலைத் திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யப்பட உள்ளது. இத்திட்டம் 15.06.2016 முதல் 180 நாள்களுக்கு செயல்படுத்தப்படும். அரசு கொள்முதல் விலையாக அரவைக் கொப்பரை ஒரு கிலோவுக்கு ரூ.59.50 மற்றும் பந்து கொப்பரை 1 கிலோவுக்கு ரூ.62.40 ஆகவும் அறிவித்துள்ளது. அதன்படி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (டென்பெட்) மூலம் திண்டுக்கல்லில் உள்ள ஏ 216 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் புதன்கிழமை முதல் கொள்முதல் செய்யப்படும். தென்னைப்பயிர் சாகுபடி பரப்பு, சர்வே எண் மொத்த நிலம், சிட்டா, பட்டா போன்ற விவரங்களை கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர்களிடம் விவசாயிகள் சான்று பெற வேண்டும். வருவாய்த்துறை அளித்த சான்றின்படி, கூட்டுறவுத்துறையின் மூலம் கொள்முதல் செய்யப்படும்.

விவசாயிகளுக்கு கொப்பரைத் தேங்காய்க்கான கொள்முதல் விலை நேரடியாக வங்கிக்கணக்கில் செலுத்தப்படும். அல்லது கோடிட்ட காசோலையாக வழங்கப்படும். கொள்முதல் மையங்களில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்கள் மூலம் கொப்பரை மாதிரி எடுத்து அதன் தரத்தை ஆய்வு செய்தபின் கொள்முதல் செய்யப்படும் என தெரிவித்துள்ளார்.

## ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் முருங்கை-தக்காளி விலை உயர்வு

ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் முருங்கை மற்றும் தக்காளி விலை உயர்ந்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு பெய்த கோடை மழையால் காய்க்கும் தருவாயில் இருந்த பூக்கள் உதிர்ந்து விட்டன. இதனால் முருங்கை மற்றும் தக்காளி ஆகியன சரிவர விளைச்சல் இல்லாமல் போய்விட்டது. இந்த நிலையில், காய்கறி சந்தைக்கு தக்காளி மற்றும் முருங்கை வரத்து முற்றிலும் குறைந்தது. அதேசமயம் திருமண நிகழ்ச்சிகள், கோயில் திருவிழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு காய்கறிகளை அதிக அளவு பொதுமக்கள் வாங்கிச் செல்கின்றனர். சந்தைக்கு குறைந்த அளவே முருங்கை மற்றும் தக்காளி வரத்து இருந்ததாலும், தேவைக்கு ஏற்ப வரத்து இல்லாததாலும் வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு கொள்முதல் செய்கின்றனர். இதனால் செவ்வாய்க்கிழமை 14 கிலோ கொண்ட ஒரு பெட்டி தக்காளி விலை ரூ.900-க்கும், ஒரு கிலோ முருங்கைக்காய் விலை ரூ.75-க்கும் விற்பனையானது. இந்த விலை மேலும் உயரக்கூடும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

## போலி உயிர் உரம் விற்பனை: வேளாண் துறை சோதனை

தேனி மாவட்டத்தில் உள்ள தனியார் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துக் கடைகளில் போலி உயிர் உரம் விற்பனை செய்யப்படுவது குறித்து மாவட்ட விவசாயத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

மாவட்டத்தில் தோட்டப் பயிர் சாகுபடியில் இயற்கை உரங்கள் மற்றும் உயிரியல் பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதில் விவசாயிகள்

ஆர்வம் காட்டி வருகின்றனர். வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் உயிர் உரம் மற்றும் உயிரியல் பூச்சிக் கொல்லி மருந்துகள் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்த நிலையில், தனியார் உரக் கடைகளில் விற்பனை செய்யப்படும் உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் பூச்சிக் கொல்லி மருந்துகளில் ரசாயனக் கலப்பு உள்ளதாக புகார் எழுந்தது. இதன் அடிப்படையில், மாவட்டத்துக்கு உள்பட்ட பல்வேறு பகுதிகளிலும் மாவட்ட விவசாயத் துறை அதிகாரிகள் 8 குழுக்கள் அமைத்து சோதனை நடத்தி வருகின்றனர்.

இதில், இதுவரை ரூ.50 லட்சம் மதிப்பிலான போலி உயிர் உரங்கள் கண்டறிப்பட்டு விற்பனை தடை செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த உயிர் உரங்களின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுக் கூட பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் விவசாயத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மாவட்டத்தில் 7 இடங்களில் இன்று முதல் கொப்பரை கொள்முதல்: ஆட்சியர் தகவல்

திருப்பூர் மாவட்டத்தில் புதன்கிழமை முதல் 7 மையங்களில் விவசாயிகளிடமிருந்து கொப்பரைக் கொள்முதல் செய்யப்படவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ச.ஜெயந்தி தெரிவித்ததாவது:

அரசு ஆதார விலை திட்டத்தின் கீழ் தென்னை விவசாயிகளிடமிருந்து அரவை கொப்பரை கிலோ ரூ. 59.50-க்கும், பந்து கொப்பரை கிலோ ரூ. 62.40-க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களின் மூலம் உடுமலைப்பேட்டை, மொடக்குப்பட்டி, வாவிபாளையம், பல்லடம், பொங்கலூர், தாராபுரம், அவிநாசி ஆகிய இடங்களில் அமைந்துள்ள கொப்பரை மையங்கள் மூலம் 6 மாத காலத்துக்கு கொப்பரை கொள்முதல் செய்யப்படும்.

எனவே, திருப்பூர் மாவட்ட தென்னை விவசாயிகள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி தங்களிடம் உள்ள கொப்பரைகளை தங்கள் அருகாமையில் உள்ள கொப்பரை கொள்முதல் மையங்களில் விற்று பயன்பெறலாம்.

தென்னை விவசாயிகளுக்கான அடையாள அட்டைகள் அச்சடிக்கப்பட்டு அந்தந்த வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அடையாள அட்டை தேவைப்படும் தென்னை விவசாயிகள் அந்தந்த வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு தேவைப்படும் விவரத்தினை வழங்கி, தங்களின் அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளலாம் என்றார்.

## ஒரு லட்சம் விவசாயிகளுக்கு மண் வள அட்டை வழங்க இலக்கு

ஈரோடு மாவட்டத்தில் எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் ஒரு லட்சம் விவசாயிகளுக்கு மண் வள அட்டை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலக மண் வள ஆண்டையொட்டி, தேசிய அளவில் தரிசு நிலங்களின் தன்மையை ஆய்வு செய்யவும், உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் வகையில் வேளாண் துறை மூலமாக மண் வள ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 375 வருவாய் கிராமங்களில் இருந்து 1 லட்சம் விவசாயிகளுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் இருந்து மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்து மண்வள அட்டை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நடப்பு ஆண்டில் இதுவரை 65,041 விவசாயிகளுக்கு மண் வள அட்டை விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து, வேளாண் உதவி இயக்குநர் சாவித்திரி, சிறப்பு வேளாண் அலுவலர் ஜெயமணி, வேளாண் அலுவலர் சுமையா ஆகியோர் கூறியதாவது:

மானாவாரி, ஆயக்கட்டு மற்றும் தரிசு நிலங்களில் மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்வதன் மூலமாக மண்ணின் வளம் குறித்த தகவல்களைச் சேகரிக்க மத்திய வேளாண் துறை உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, நடப்பு ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 1 லட்சம் விவசாயிகளுக்குச் சொந்தமான நிலத்தின் மண்ணை எடுத்து அதில் உள்ள மண் நயம், கார, அமில நிலை, சுண்ணாம்பு நிலை, மண்ணில் உள்ள அங்கக சத்துகள், கால்சியம், மெக்னீஷியம், சோடியம், கந்தகம் போன்றவற்றின் அளவுகள் குறித்து அறிந்து மண் வள அட்டை

வழங்கப்படும். மண்ணில் உள்ள சத்துகளின் அடிப்படையில் அது களர் நிலமா, விவசாயம் செய்வதற்கு ஏற்ற நிலமா என்பதையும் விவசாயிகளுக்குப் பரிந்துரை செய்கிறோம்.

இதன் மூலமாக அந்த நிலத்தில் என்னென்ன பயிர்களை சாகுபடி செய்யலாம் என்பதை அறிந்து கொள்ள இயலும். அந்த வகையில் இதுவரை மாவட்டம் முழுவதும் 65,041 விவசாயிகளுக்கு மண் வள அட்டை வழங்கப்பட்டுள்ளது. வரும் மார்ச் 2017-க்குள் 1 லட்சம் விவசாயிகளுக்கு மண் வள அட்டை வழங்கப்படும். மானாவாரி, தரிசு நிலங்கள் மட்டுமின்றி ஆயக்கட்டு பாசன நிலங்களிலும் எடுக்கப்பட்ட மண் மாதிரி ஆய்வுகள் மூலமாக குறைந்த உரம், பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெற விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்.

தனியே மண் மாதிரி பரிசோதனை செய்தால் குறைந்தபட்சம் ரூ. 250 செலவாகும். ஆனால், இலவசமாக நாங்கள் மண் மாதிரி பரிசோதனை செய்து தருவதன் மூலமாக நிலங்களில் தேவையில்லாமல் கூடுதல் உரங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்க முடியும் என்றனர்.

## அரூர் கூட்டுறவு சங்கத்தில் இன்று முதல் கொப்பரை கொள்முதல்

தருமபுரி மாவட்டம் அரூர் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலம் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் புதன்கிழமை தொடங்கி 6 மாதக் காலத்துக்கு நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் கே. விவேகானந்தன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தென்னை விவசாயிகளின் நலன் காக்கும் வகையில் கொப்பரை கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற முதல்வரின் அறிவிப்பைத் தொடர்ந்து, தருமபுரி மாவட்டத்திலுள்ள அரூர் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலம் கொப்பரைக் கொள்முதல் செய்யப்படவுள்ளது.

புதன்கிழமை (ஜூன் 15) தொடங்கி 6 மாதக் காலம் வரை அரசின் ஆதார விலைத் திட்டத்தில் இந்தக் கொள்முதல் நடைபெறும். அரைவைக்

கொப்பரைத் தேங்காய் கிலோ ஒன்றுக்கு ரூ.59.50-க்கும் பந்துக் கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.62.40-க்கும் கொள்முதல் செய்யப்படும்.

தென்னை விவசாயிகள் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வேளாண் துறை அலுவலர்களிடமிருந்து சான்றிதழ் பெற்று கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

தேசிய கூட்டுறவு வேளாண் விற்பனை இணையத்தின் தரத்துக்குள்பட்டதாக கொப்பரை இருக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் தலைமையிலான கண்காணிப்புக் குழுவினரால் இந்தக் கொள்முதல் கண்காணிக்கப்படும்.

கொள்முதலுக்கான தொகை விவசாயிகளின் விருப்பத்துக்கேற்ப வங்கிக் கணக்கில் மின்னணு நிதி மாற்றம் மூலமாகவோ காசோலையாகவோ மூன்று நாள்களில் வழங்கப்படும். விவசாயிகளால் செலுத்தப்பட வேண்டிய ஒரு சதவிகித சந்தைக் கட்டணம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

மேலும் 5 சதவிகித மதிப்புக்கூட்டு வரியும் முற்றிலும் ரத்து செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மூலம் தருமபுரி மாவட்டத்தில் சுமார் 9,859 ஹெக்டேரில் தென்னை பயிரிட்டுள்ள விவசாயிகள் பலனடைவர் என்றார் ஆட்சியர்.

## திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் குவிந்த 953 லாட் பருத்தி

திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்துக்கு விவசாயிகள் 953 லாட் பருத்திகளை கொண்டு வந்திருந்தனர்.

திருவாரூர் மாவட்டத்தில் தற்போது பருத்தி செடியிலிருந்து பஞ்சுகள் எடுக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. விவசாயிகள் அறுவடை செய்த பருத்திகளை விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மறைமுக ஏலத்துக்கு கொண்டு வருவது வழக்கம்.

அதன்படி, செவ்வாய்க்கிழமை திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு நெருங்குடி, அடியக்கமங்கலம், தென்ஓடச்சேரி, சத்தியவாடி,

முல்லித்தோப்பு, ஆதிச்சபுரம், கோட்டூர், ராதாமங்கலம், ஊட்டியாணி, சேந்தங்குடி, கங்களாஞ்சேரி, கல்லிக்குடி, பழையவலம், மழையூர், சித்தாநல்லூர், எட்டியலூர், பிளாக்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் 953 லாட்டுகளில் பருத்திகளை ஏலத்துக்கு வைத்திருந்தனர்.

செம்பனார்கோயில், சேலம் கொங்கனாபுரம், திருப்பூர், விழுப்புரம், கும்பகோணம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்திருந்த 11 வியாபாரிகள் தாங்கள் கேட்கும் தொகையை ஏலச்சீட்டில் எழுதி ஏலப்பெட்டியில் போட்டிருந்தனர்.

இதையடுத்து, பிற்பகல் வேளாண் விற்பனைக் குழுத் துணை இயக்குநர் எம். மனோகரன், செயலர் சேரலாதன், கண்காணிப்பாளர் ரமணி ஆகியோர் ஏலப்பெட்டியை திறந்து வியாபாரிகள் கேட்ட விலையை படித்தனர்.

இதில் அதிகபட்சமாக பருத்தி குவிண்டாலுக்கு ரூ. 5,269 விலை கேட்கப்பட்டிருந்தது. குறைந்தபட்சமாக ரூ. 4,500 விலையும், சராசரியாக ரூ. 4,850 விலை போனது.

கடந்த வாரத்தைக் காட்டிலும் செவ்வாய்க்கிழமை பருத்திகளை விவசாயிகள் அதிகளவில் கொண்டு வந்தனர். அதேபோல், விலையும் குவிண்டாலுக்கு ரூ. 100 வரை கூடுதலாக கிடைத்தது.

## விருதுநகர் மண்டலத்துக்கு 1,000 டன் நெல்

நீடாமங்கலத்திலிருந்து விருதுநகர் மண்டலத்துக்கு 1,000 டன் சன்னரக நெல் அரவைக்காக செவ்வாய்க்கிழமை சரக்கு ரயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு, திறந்தவெளி சேமிப்பு மையங்கள் ஆகியவற்றிலிருந்து 75 லாரிகளில் 1,000 டன் சன்னரக நெல் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டது.

நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில் சுமைதூக்கும் தொழிலாளர்கள் நெல் மூட்டைகளை சரக்கு ரயிலின் 21 பெட்டிகளில்

அடுக்கினர். இதைத்தொடர்ந்து, நெல் மூட்டைகள் அரவைக்காக விருதுநகர் மண்டலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## தக்காளி விலை கிலோ ரூ.100! பீன்ஸ், அவரை, முருங்கை விலையும் சதம்

திருநெல்வேலி மாவட்ட காய்கறி சந்தைகளில் தக்காளி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. பல்வேறு இடங்களில் கிலோ ரூ.100-க்கு விற்பனையாகிறது.

இதேபோல, பீன்ஸ், அவரை, முருங்கைக்காய் விலையும் கிலோ ரூ.100 ஆக உள்ளது. காலிபிளவர், இஞ்சி ஆகியவற்றின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளதால் இல்லத்தரசிகள் கவலையடைந்துள்ளனர்.

திருநெல்வேலி மாநகரில் நகரம், தச்சநல்லூர், பாளையங்கோட்டை, நயினார்குளம் ஆகிய பகுதிகளில் காய்கறி சந்தைகள் இயங்கி வருகின்றன. இவை தவிர மாவட்டம் முழுவதும் வட்டத் தலைநகரங்களிலும், நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளிலும் காய்கறி சந்தைகள் உள்ளன. 15 உழவர் சந்தைகளும் இயங்கி வருகின்றன. இந்த சந்தைகளுக்கான காய்கறி வரத்தில் கத்தரி, சுரைக்காய், புடலை, வெண்டை ஆகிய காய்கறிகள் மட்டும் உள்ளூர் பகுதியில் இருந்து வருகிறது. காரட், பீட்ரூட், உருளை, முள்ளங்கி உள்ளிட்ட பல்வேறு காய்கறிகள் ஊட்டி, மேட்டுப்பாளையம், உடுமலைப்பேட்டை பகுதிகளில் இருந்து வருகின்றன. இவை தவிர தக்காளி, முட்டைகோஸ், காலிபிளவர் உள்ளிட்டவை தருமபுரி, கிருஷ்ணகிரி, பெங்களூரில் இருந்து வருகின்றன. பெரும்பாலான காய்கறிகள் மதுரை, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் பகுதிகளில் இருந்துதான் வருகின்றன.

சந்தையில் காய்கறிகளின் விலை அவ்வப்போது ஏற்றம், இறக்கமாக இருப்பது வாடிக்கை. இப்போது, தக்காளியின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த மாத இறுதியில் கிலோ ரூ.20-க்கு விற்பனையான தக்காளி, இம்மாத தொடக்கத்தில் இருந்தே ஏறுமுகத்தை நோக்கிச் சென்றது. இப்போது, கிலோ ரூ.100-க்கு வந்து நிற்கிறது. உழவர் சந்தை, தினசரி சந்தைகளில் ரூ.80, ரூ.90, ரூ.100 என விருப்பம்போல

விலையுள்ளது. கேள்வி எழுப்பினால் ரகத்துக்கு தகுந்த விலை என்கின்றனர் வியாபாரிகள்.

வெங்காயம், அவரை, முருங்கை, காலி பிளவர், இஞ்சி விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. சின்ன வெங்காயத்தின் விலை கடந்த வாரம் கிலோ ரூ.30-க்கும் ரூ.40-க்கும் விற்பனையானது. இப்போது, கிலோ ரூ.60 ஆக உயர்ந்துள்ளது. பெரிய வெங்காயத்தின் விலையும் ரூ.15-லிருந்து ரூ.20 ஆக விலை உயர்ந்துள்ளது.

கடந்த வாரம் ரூ.70-க்கு விற்பனையான அவரைக்காய் ரூ.100 ஆக உயர்ந்துள்ளது. இதேபோல, கிலோ ரூ.60-க்கும், ரூ.80-க்கும் விற்பனையான இஞ்சி ரூ.100 என விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரம் ரூ.40-க்கு விற்பனையான காலிபிளவர் ரூ.60 ஆகவும், கடந்த வாரம் ரூ.80-க்கு விற்ற முருங்கைக்காய் ரூ.100 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. காரட் விலை மட்டும் ரூ.60-லிருந்து ரூ.44 ஆக குறைந்துள்ளது. இதர காய்கறிகளின் விலை ஏற்ற-இறக்கமின்றி நிலையாக உள்ளது.

அவற்றின் விலை விவரம் கிலோவுக்கு: மிளகாய் - ரூ.40, உருளை- ரூ. 28, கோஸ் ரூ.28, பீட்ரூட் ரூ.44, சவ்சவ்- ரூ.40, மாங்காய் ரூ.16, பீன்ஸ் ரூ.100, வெண்டை ரூ.26, கத்தரி ரூ.40, சேனை ரூ.100, சேம்பு ரூ.24, கருணைக்கிழங்கு ரூ.40, பாகற்காய் ரூ.24, தடியங்காய்- ரூ.16, பூசணி ரூ.20, பீர்க்கங்காய் ரூ.50, முள்ளங்கி- ரூ.40, சீனி அவரை- ரூ.30, வாழைக்காய் ரூ.30, புடலை- ரூ.15, கொத்தமல்லி- ரூ.80, கருவேப்பிலை ரூ.24 என விற்பனை செய்யப்படுகிறது.

இதுகுறித்து, திருநெல்வேலி நகரம் காய்கறிச் சந்தையில் பணிபுரியும் மாரியப்பன் கூறுகையில், வரத்து குறைவாக இருக்கும் தருணங்களில் விலை உயர்வு இருப்பது வாடிக்கை. இப்போது, தக்காளி, பீன்ஸ், இஞ்சி, அவரை, முருங்கை ஆகியவற்றின் விலை மட்டுமே அதிகமாக உள்ளது என்றார்.

பாளையங்கோட்டை மார்க்கெட்டுக்கு காய்கறிகளை வாங்க வந்திருந்த தெற்கு பஜாரை சேர்ந்த லட்சுமி கூறியது: சாம்பார் தொடங்கி சகலவிதமான பொரியல், அவியல், கூட்டு ரகங்களுக்கும் தக்காளி, சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் அவசியம். சமையலில் அதிகளவில் பயன்படுத்தப்படுவதும் இந்தக் காய்கறிகள் மட்டுமே. ஆனால், தக்காளி, வெங்காயம் விலை உயர்வு பெரும் சிரமத்தைக் கொடுத்துள்ளது என்றார் அவர்.

## கடும் வெயிலிலும் உயராத எலுமிச்சை!

வழக்கமாக கோடைக் காலங்களில் எலுமிச்சை விலை அதிகமாக இருக்கும். வீடுகளில் குளிர்பானங்கள் தயாரிக்கவும், கடைகளில் சர்பத், சோடா உள்ளிட்டவற்றுக்காகவும் அதிகளவில் எலுமிச்சை கொள்முதல் செய்யப்படும். இதன் காரணமாக ஆண்டுதோறும் கோடைக் காலத்தில் எலுமிச்சையின் விலை வழக்கத்தைவிடக் கூடுதலாக இருக்கும். கடந்தாண்டு மே, ஜூன் மாதங்களில் எலுமிச்சையின் விலை கிலோ ரூ.140 ஆக இருந்தது. இப்போது, கிலோ ரூ. 80, 100 என ரகத்துக்கு ஏற்ப விற்பனை செய்யப்படுகிறது என்கின்றனர் எலுமிச்சை வியாபாரிகள்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஒரே செடியில் 7 கிலோ மஞ்சள்



ஒரே செடியில் ஏழு கிலோ மஞ்சள்; ஒரு ஏக்கரில் 40 டன் மஞ்சள் எடுத்து சத்தியமங்கலம் செண்பகப்புதுார் விவசாயி ராமமூர்த்தி சாதனை படைத்துள்ளார். இவர் தனது தோட்டத்தில் பயிர்களை காவு வாங்கும் பூச்சி மருந்து, மண் வளத்தை பாழாக்கும் ரசாயன மருந்துகளை பயன்படுத்துவதில்லை. அதற்கு பதிலாக இயற்கை முறையில் கிடைக்கும் பஞ்சகாவ்யம், மண்புழு உரம், இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி விவசாயம் செய்து வருகிறார்.

இவர் தனது தோட்டத்தில் புதிய ரக 'பிரதீபா' மஞ்சளை பயிர் செய்தார். சொட்டு நீர் பாசனம், இயற்கை வேளாண் உரங்களை மட்டுமே பயன்படுத்தி மஞ்சள் மகசூல் செய்தார். கிழங்கு அழுகல் நோய், இலை கருகல் நோய் என எவ்விதமான நோயும் மஞ்சள் கிழங்குகளை தாக்கவில்லை.

பூச்சிகளையும், புழுக்களையும் விரட்ட இயற்கை ஊக்கிகளை மட்டுமே பயன்படுத்தினார். மஞ்சள் அறுவடை தற்போது நடைபெற்றது. பயிரிடப்பட்ட பிரதீபா ரக மஞ்சள் செடி ஒன்றில் ஆறு கிலோ முதல் ஏழு கிலோ வரை தரமான மஞ்சளும், ஒரு ஏக்கரில் 40 டன் மஞ்சளும் கிடைத்தது.

ராமமூர்த்தி கூறியதாவது: நம்பிக்கை தரும் முக்கிய பணப்பயிர்களில் மஞ்சள் முதன்மையானது.

தமிழகத்தில் ஆண்டு தோறும் 7 லட்சம் டன் மஞ்சள் உற்பத்தி செய்யப்படுகிறது. ஈரோடு, கோவை, திருப்பூர், தாளவாடி, சேலம், மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய பகுதிகளில் அதிகளவு மஞ்சள் விளைவிக்கப்படுகிறது.

மஞ்சளில் பல ரகங்கள் இருந்தாலும் பிரதீபா ரக மஞ்சள் இந்த ஆண்டு பருவத்திற்கு ஏற்றது. நோய் தாக்குதலை தாங்கி குறைந்த அளவு தண்ணீரில் அதிகளவு மகசூல் தரக்கூடியது. சாதாரணமாக ஒரு ஏக்கரில் அதிகபட்சம் 25 டன் வரை மட்டுமே மஞ்சள் எடுப்பதே பெரும் சவாலாக இருக்கும். இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி ஒரு ஏக்கரில் 40 டன் மஞ்சள் மகசூல் எடுக்கப்பட்டது. மஞ்சள் தோட்டத்தை பார்வையிட்டு பிரதீபா ரக மஞ்சள் சாகுபடி முறைகளை விவசாயிகள் கேட்டு செல்கின்றனர் என்றார். தொடர்புக்கு 94423 52121 - **கா.சுப்பிரமணியன், மதுரை.**

**இயற்கை உரங்களால் ஏற்படும் நன்மை**



மண்புழு உரம், பண்மைக் கழிவுகளை மக்க வைத்து மாற்றிய உரம், தென்னை நார் கழிவு உரம், களை செடிகளில் இருந்து கிடைக்கும் மட்கிய உரம், கரும்பு தோகை உரம், உரமேற்றிய தொழு உரம் போன்ற இயற்கை உரங்கள் பற்றி அறிந்தும், தயாரித்தும், பயன்படுத்தியும் வருகின்றனர். மாடு, ஆடுகளின் சாணம் மக்கிய பின் சிறந்த உரமாக பயன்படுகிறது.

'எருதுகள் இல்லாத இடத்தில் களஞ்சியம் வெறுமையாய் இருக்கும். காளைகளின் பலத்தினாலே மிகுந்த வரத்துண்டு' என முன்னோர் கூறினர். இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார், "பசுக்கள், காளைகளை ஒவ்வொரு விவசாயியும் வளர்க்க வேண்டும்," என்றார். இக்கருத்தை பல விவசாயிகள் உற்று நோக்கி வருகின்றனர். எனவே பசுக்களை வாங்குகின்றனர். எருதுகளை கொண்டு உழுகின்றனர். சாணம் கொண்டு மண்புழு உரம் தயாரித்து சுய தேவைக்கும், விற்கவும் செய்கின்றனர். வேப்ப எண்ணெய் கலந்த யூரியா, வேப்பம் புண்ணாக்கு போன்ற இயற்கை உரங்களை பெரிய உர நிறுவனங்கள் தயாரித்து விற்கின்றன.

இயற்கை உரங்களின் நன்மை: சாகுபடி செலவு குறைகிறது. நிகர லாபம் அதிகமாகிறது. மண் வளம் சிறப்பாக பாதுகாக்கப்பட்டு மேன்மையாகிறது. இயற்கை உரங்கள் மட்டும் பயன்படுத்தினால் விளை

நிலங்களில் நன்மை செய்யும் பூச்சிகள், நுண்ணுயிரிகளின் (பாக்டீரியா) எண்ணிக்கை பெருகுகிறது.

பயிர்கள் இயல்பாகவே பூச்சி, நோய் எதிர்ப்பு திறனை பெறுகின்றன. இதனால் ரசாயன பூச்சி மற்றும் நோய் மருந்துகளை தெளிப்பதை குறைக்கவும் படிப்படியாக விட்டு விடவும் செய்யலாம். மண்ணின் கட்டமைப்பு கடினமாகாததால் பயிர்கள், சத்துக்களை எளிதாக எடுத்து கொள்கின்றன.

சீரான பயிர் வளர்ச்சியும் தரமான விளைச்சலும் கிடைக்கும். சுற்றுப்புற சூழல் தூய்மை ஆகிறது. இயற்கை உரங்களால் விஷமில்லா பயிர்கள் கிடைக்கின்றன. அவற்றை உண்பதால் ஆரோக்கியமான சந்ததி உருவாகிறது.

இயற்கை உரங்களை விவசாயிகள் தாங்களே தயாரிப்பதால் உரச்செலவினம் குறைகிறது. இயற்கை உரம் தயாரிக்கும் முறைகள் குறித்து தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம்.**-எம்.ஞானசேகர், தோட்டக்கலை உதவி இயக்குனர், உடுமலைப் பேட்டை 93807 55629**

**பப்பாளி**



அனைத்து நிலத்திலும் பப்பாளி செழிப்பாக வளரக்கூடிய பணப்பயிர். வடிகால் நிலம் இதன் வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றதாகும். முதிர்ந்த பப்பாளி பழங்களில் இருந்து விதைகளை எடுத்து உரியவாறு தோட்டங்களில்

விதைத்தால், 30 நாட்களில் முளைத்து வளர்ந்து விடும். மழைக்காலங்களில் நீர் பாய்ச்ச வேண்டியதில்லை. மழை இல்லாத நாட்களில் வாரம் இருமுறை நீர் பாய்ச்சுதல் அவசியமாகும். இயல்பாக நிலத்தின் மண்ணோடு அமைந்துள்ள உரங்களே இவற்றின் வளர்ச்சிக்கு ஏற்புடையதாகின்றன. எனினும் மாட்டுச்சாணம், கோமியம், சமையலறைக் கழிவுகள் ஆகியவற்றை சாதாரண இயற்கை உரமாக பயன்படுத்தலாம்.

சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ், அமோனியம் சல்பேட் ஆகியவற்றையும் மாதம் ஒரு முறை சேர்த்து வந்தால் ஓர் ஆண்டினுள் அதிகமான பலனை தரும்.

நாடு, ஒட்டுவிவசாயிகள் பலர் தங்களின் தோட்டங்களில் ஊடு பயிராகப் வரப்புகளின் ஓரங்களிலே பயிரிடுகின்றனர். வியாபார நோக்கத்தில் பயிரிடுவோருக்கு நல்ல வருமானம் தரக்கூடிய பணப் பயிராகும். நாட்டு பப்பாளி, வீரிய ஒட்டுரக பப்பாளி என இருவகை உண்டு. நாட்டு பப்பாளி பெரும்பாலும் வியாபார நோக்கில் வளர்ப்பதில்லை. வீடுகளில் மட்டுமே வளர்க்கின்றனர். தைவான் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வீரிய ஒட்டுரக பப்பாளி விதைகள் 10 கிராம் ரூ.2700 விலைக்கு வாங்கி பயிரிடுகின்றனர்.

**பப்பாளி பயன்**: பப்பாளி பழம் சதைப்பற்று மிகுந்த உன்னத ஊட்டச்சத்து நிறைந்த பழம். இதில் ஏ.பி.சி., எனப்படும் உயிர்ச்சத்துக்கள், நார்ச்சத்து, தாது உப்பு, 'ஒமேகா' எனும் கொழுப்பு அமிலமும் உள்ளன. இவை புற்று நோய் வராமல் சரீரத்தை காக்கும்.

பப்பாளி பழத்தை சீவும் பொழுது வெளியேறும் 'பப்பெய்ன்' என்ற திரவம் ஜீரணத்தை எளிதாக்குகின்றது. பிற்பகல் உணவுக்கு பின் தினமும் பப்பாளி பழத்துண்டுகளை ஓரளவு சாப்பிட்டு வந்தால் மாரடைப்பு ஏற்படாது. பக்கவாதம் தாக்குதலில் இருந்து தப்பலாம். உடலுக்கு உஷ்ணத்தை அளித்திடும் உன்னதமான பழம். பப்பாளியை பயிரிட்டு கைநிறைய பணம் சம்பாதிக்கலாம். ஆலோசனைக்கு வட்டார வேளாண் அலுவலகத்தை அணுகலாம். **- எஸ்.நாகரத்தினம், விருதுநகர். முன்னாள் நிர்வாக அலுவலர், வாசனை திரவிய வாரியம்**

**மா என்னும் மருந்து**



மாமரம் வெப்பம் மிகுந்த பகுதிகளில் அதிகமாக வளரும். வறட்சியான நிலப் பகுதிகளிலும் கூட இது வளரும் தன்மை கொண்டது. மா பூக்கும் காலத்திலும், மாங்காய்கள் முற்றும் காலத்திலும் கோடையில் காய்ப்பு அதிகமான பலனைத்தரும். மாமரம் வளருவதற்கு வண்டல் மண் ஏற்றதாயினும், களிமண் நிலத்திலும் செழிப்பாக வளரும். ஒன்றரை அடி ஆழத்தில் நிலத்தை தோண்டி, மூன்று தினங்கள் காயப்போட்டு, மாங்கன்றை வளர செய்யலாம். இது அகலமாகப் படர்ந்து விரிந்து வளரும் இயல்பு உடையது. பசுமையான இலைகளும் மிக அடர்ந்து காணப்படும்.

இதன் இனப்பெருக்கத்தைக் காய்ந்த கொட்டைகளின் மூலம் உருவாக்குவதல் மிக எளிது. ஒட்டு மூலமாகவும் வளரச் செய்யலாம். முக்கனிகளில் முதன்மையானது மாம்பழம். நூற்றுக்கணக்கான மாம்பழ வகைகள் உள்ளன. சேலம், பெங்களூரு, மல்கோவா, நீலம் முதலியன பிரபல ரகங்கள். இதில் சேலம் மாம்பழம் தனித்தன்மை பெற்றுள்ளது. இந்த மாம்பழம் சுவை மிகுந்தது. மல்கோவா மாம்பழத்தில் நார் இல்லை. பங்கனப்பள்ளி மாம்பழம் சதைப்பகுதியை கெட்டியாகக் கொண்டுள்ளது. மாம்பழங்களை பக்குவமாக பதப்படுத்தினால், அவற்றின் சத்துக்கள் அதிகமாகின்றன. பல நாட்களுக்கு அதை பயன்படுத்த ஏதுவாகின்றது. நீண்ட ஆயுள், ஆண்மை விருத்தி நீடிக்கும் மா மருந்து மாம்பழம் என்றால்

அது மிகையல்ல. குறைந்த இடத்திலும் மாங்கன்றுகளை வளர்த்து பலன் பெறலாம். ஒருமுறை நட்டு வளர்க்க பல ஆண்டுகள் பலன் தரும் மரமாக மா உள்ளது.

## தண்ணீர் பஞ்சத்தை போக்கும் மரங்கள்

உலகின் பெரிய மரங்கள் என்ற அந்தஸ்தை பாவோபாப் மரங்கள் பெற்றுள்ளன. பெரிய பாவோபாப் மரத்தின் நீர் கொள்ளளவு 1 லட்சத்து 20 ஆயிரம் லிட்டர். பாவோபாப் மரங்கள் 98 அடி உயரம், 36 அடி குறுக்களவும் கொண்டவை.கடுமையான கோடை காலத்திலும் ஒரு சொட்டு நீர் கூட வெளியேறாதவாறு பாவோபாப் மரங்கள் தகவமைப்பைக் கொண்டுள்ளன. வறட்சிக் காலத்தில் மடகாஸ்கர் ஆப்ரிக்க நாட்டு ஏழை மக்கள் இதன் நீரைப் பருகி பயன்பெறுகின்றனர்.

மேல்மரம் காய்ந்து விட்ட நிலையில் பல கிராமங்களில் அடிமரத்தை நீர்த்தேக்க தொட்டியாகப் பயன்படுத்துகின்றனர். பாவோபாப் மரங்களின் ஆயுட்காலமும் அதிகமாக உள்ளது.

## முந்தி கொண்டது ஆந்திர நாவல் பழம்

திருத்தணி: நாட்டு நாவல் பழத்திற்கு முன்பாக, ஆந்திர நாவல் பழம் சந்தைக்கு வந்துள்ளது. சுவையும், சதைப்பற்றும் அதிகம் என்பதால், விலையை பொருட்படுத்தாமல், பகுதிவாசிகள் வாங்கி ருசித்து வருகின்றனர்.

ஆனி மாதத்தில், நாவல் பழம் பழுத்து சந்தைக்கு விற்பனைக்கு வரும். கிராமங்களில் வயல் வரப்புகளில் உள்ள நாவல் மரங்கள், பாரம்பரிய வகையை சேர்ந்த நாட்டு மரங்களாகும். இதன் பழம், கொட்டை, இலைக்கு மருத்துவ குணங்கள் உள்ளதாக கூறப்படுகிறது.

இதற்கு போட்டியாக, சில ஆண்டுகளாக, கலப்பின நாவல் பழங்கள் சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றன. ஆனிக்கு முன்பாக, வைகாசி கடைசி வாரத்திலேயே சந்தைக்கு வந்துள்ளது.

நாட்டு நாவல் பழங்களை விட, அளவில் பெரியதாக காணப்படும் இந்த கலப்பின வகை, ஆந்திர நாவல் பழம் என, கூறப்படுகிறது.

இவை தோப்புகளில் தனி கவனத்துடன் வளர்க்கப்படுகிறது.

நாட்டு நாவல் பழம், இனிப்பு, புளிப்பு கலந்த சுவை கொண்டது. கலப்பின வகையில், இனிப்பு சற்று கூடுதலாக இருக்கும். சதைப்பற்றும் அதிகம். இதனால், பகுதிவாசிகளிடையே இந்த புதிய ரகத்திற்கு நல்ல வரவேற்பு உள்ளது.

திருத்தணி பூ மார்க்கெட் மற்றும் மலைக்கோவிலில் விற்பனை செய்யப்படும் ஆந்திர நாவல் பழத்தை, பகுதிவாசிகள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். ஒரு கிலோ பழம்,

120 ரூபாய் என விற்பனை செய்யப்படுகிறது. நாட்டு நாவல் பழம் கிலோ 30 ரூபாய்க்கு, கடந்த ஆண்டு விற்பனை செய்யப்பட்டது.

## வறட்சியால் இயற்கை தீவனங்களுக்கு தட்டுப்பாடு - தவிப்பில் கால்நடை வளர்ப்போர்

ஆண்டிபட்டி: ஆண்டிபட்டியில் வறட்சியால் கால்நடைகளின் இயற்கை தீவனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் கால்நடைகளை பராமரிக்க முடியாமல் விற்றுவிடும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆண்டிபட்டி பகுதியில் நூாற்றுக்கணக்கான ஏக்கரில் மழைக்காலங்களில் மானாவாரி விவசாயமும், நீர் செழிப்பான பகுதிகளில் ஆண்டு முழுவதும் இறவைப்பாசனமும் நடந்து வருகிறது. விவசாயிகள் கால்நடை வளர்ப்பை துணைத் தொழிலாக கொண்டுள்ளனர். பால் மாடுகள், ஆடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவாய் ஈட்டி வருகின்றனர்.

மழைக்காலங்களில் விளையும் தானிய, பயறு வகை பயிர்களை அறுவடைக்கு பிறகு கால்நடை தீவனத்திற்கு பயன்படுத்துவர். கூடுதல் தேவைகளுக்கு வெளியூர்களில் இருந்து வைக்கோல், சோள தட்டைகளை விலைக்கு வாங்கி வந்து இருப்பில் வைத்து கோடைகாலத்தில் தீவனத்திற்கு பயன்படுத்திக்கொள்வர்.

இயற்கை கைகொடுக்காதது, விளைபொருட்களுக்கான நிலையில்லாத விலை இவற்றால் பாதிப்படைந்து வரும் விவசாயிகளால் ஆண்டுதோறும் மானாவாரி, இறவை பாசன நிலங்களின் பரப்பு குறைந்து வருகிறது. இதனால் கால்நடைகளுக்கு தேவையான புல், வைக்கோல் போன்ற இயற்கை தீவனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகிறது.

புண்ணாக்கு, பருத்திக்கொட்டை உள்ளிட்ட தீவனங்கள் விலை பல மடங்கு உயர்ந்து விட்டது.

விளைச்சல் குறைந்ததால் இயற்கை தீவனங்களை போதுமான அளவில் இருப்பு வைக்க முடியவில்லை. கால்நடை தீவனத்திற்காக திண்டாடும் நிலை ஏற்படுகிறது. வறட்சி காலங்களில் விவசாயிகள் பலர் பால்மாடுகள், வளர்ப்பு மாடுகளை பராமரிக்க முடியாமல் குறைந்த விலைக்கு விற்று விடுகின்றனர்.

ஆண்டிபட்டி பகுதியில் இந்த ஆண்டு கோடை மழையும் எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. கடந்த சில மாதங்களாக தொடர்ந்த கடும் வெயில், தற்போது நிலவும் வறண்ட காற்று இவற்றால் ஏற்பட்டுள்ள வறட்சியால் ஏராளமான ஏக்கர் விளை நிலங்கள் காய்ந்து கிடக்கின்றன.

பல ஏக்கர் நிலங்களில் விவசாயிகள் கோடை உழவு செய்ததால், புல் பூண்டுகள் காய்ந்து மண் மட்டுமே எஞ்சி நிற்கிறது.

நீர் வரத்து ஓடைகள், கண்மாய்கள், சிறு குளங்கள் வறண்டு பல மாதங்களாகி விட்டன. இதனால் மேய்ச்சலுக்கு செல்லும் கால்நடைகளுக்கு தீவன பாதிப்புடன் குடிநீர் பாதிப்பும் பெரும் பிரச்னையாக உள்ளது. இன்னும் சில மாதங்கள் வறட்சியின் நிலை நீடித்தால், விவசாயிகள் கால்நடைகளை விற்று விடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

**கொப்பரை கொள்முதல் மையம் இன்று வாழப்பாடியில் துவக்கம்**

சேலம்: சேலம் மாவட்டத்தில் உள்ள தென்னை விவசாயிகளுக்காக, நேரடி கொப்பரை கொள்முதல் மையம், இன்று வாழப்பாடியில் திறக்கப்பட உள்ளது.

இதுகுறித்து சேலம் கலெக்டர் சம்பத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சேலம் மாவட்டத்தில், 13 ஆயிரத்து, 929 ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் அறிவிப்பின்படி, சேலம் மாவட்டத்தில் உள்ள தென்னை விவசாயிகள் உற்பத்தி செய்துள்ள கொப்பரை தேங்காயினை, கொள்முதல் செய்ய தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் துவங்கப்பட உள்ளது. வாழப்பாடியில் இன்று முதல், துவங்க உள்ள இம்மையத்தில், அரசு அறிவித்துள்ள ஆதரவு விலைத்திட்டத்தில், நியாயமான விலைக்கு விற்பனை செய்து பயன்பெறலாம். அரவை கொப்பரை கிலோ ஒன்றுக்கு, 59.50 ரூபாய், பந்து கொப்பரை கிலோ ஒன்றுக்கு, 62.40 ரூபாய் என ஆதார விலை அளித்து, கொள்முதல் செய்யப்பட உள்ளது. தொடர்ந்து, 180 நாட்கள் செயல்பட உள்ள இம்மையத்துக்கு, கொப்பரை தேங்காய் கொண்டு வரும் விவசாயிகள், தங்களது தோட்டத்தில் தென்னை சாகுபடி செய்துள்ளதற்கு, ஆதாரமாக கிராம நிர்வாக அலுவலரின் சான்றுடன், சிட்டா மற்றும் அடங்கல் நகல், வேளாண்மை துறை வழங்கியுள்ள தென்னை விவசாயிக்கான அடையாள அட்டை, வங்கிக்கணக்கு எண், குடும்ப அட்டை நகல் மற்றும் அலைபேசி எண்ணை அளித்திட வேண்டும்.

கொப்பரை சரக்குகள் யாவும், 'நாபெட்' நிறுவனத்தின் தர நிர்ணயத்தின் அடிப்படையில், வேளாண்மை வணிகத்துறை அலுவலர் சரிபார்த்த பின்பே கொள்முதல் செய்யப்படும். விவசாயிகளின் கொள்முதல் தொகை, அவரவர் விருப்பப்படி, வங்கிக்கணக்கில் மின்னணு நிதி மாற்றம் மூலமாகவோ, கோடிட்ட காசோலை மூலமாகவோ வழங்கப்படும். இங்கு கொள்முதல் செய்யப்படும் கொப்பரை தேங்காய்க்கு, விவசாயிகளால்

செலுத்தப்பட வேண்டிய ஒரு சதவீத சந்தை கட்டணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## மகசூல் பாதிக்காமல் முதிர்ந்த பாக்கு மரங்களை அகற்றும் விவசாயிகள்: 'அடிக்கன்று' நட்டு மீண்டும் பாக்கு தோப்பு உருவாக்குவதில் ஆர்வம்

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில், 30 ஆண்டுகளுக்கு மேல் மகசூல் கொடுத்து, முதிர்ந்த பாக்கு மரங்களை, மகசூல் பாதிக்காமல் அகற்றிட, 'அடிக்கன்று' நடும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, பாக்குத்தோப்பு உருவாக்குவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மாநில அளவில், 'கொட்டைப்பாக்கு' உற்பத்தியில், சேலம் மாவட்டம் வாழப்பாடி மற்றும் சுற்றுப்புற கிராமங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. 200க்கும் அதிகமான கிராமங்களில், 8,000 ஹெக்டெர் பரப்பளவில் நீண்டகால பலன் தரும் பாக்கு பயிரிடப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு, ஆண்டு குத்தகை முறையில் முன்பணம் கொடுத்து மகசூல் உரிமை பெறும் வியாபாரிகள், மரமேறும் தொழிலாளர்களை கொண்டு பாக்குக்காயை அறுவடை செய்கின்றனர். தோலுரித்து பதப்படுத்தி, 'ஆப்பி' எனும், 'கொட்டைப்பாக்கு' உற்பத்தி செய்கின்றனர். வாழப்பாடி பகுதி கொட்டைப்பாக்கு, தமிழக பாக்கு கம்பெனிகளுக்கு மட்டுமின்றி, குஜராத், பீஹார், மத்தியபிரதேசம் உள்ளிட்ட வடமாநிலங்களில், 'பான்பராக்' தயாரிக்கும் நிறுவனங்களுக்கு ஏற்றுமதியாகிறது. ஆண்டு தோறும், தமிழ் மாதமான ஆடியில் துவங்கி, மாசி வரை, எட்டு மாதத்துக்கு பாக்கு உற்பத்தி தொழில் நடக்கிறது. அத்தொழிலால், 50 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். ஆண்டுக்கு, 500 கோடி வரை வர்த்தகம் நடக்கிறது.

கடந்த, 10 ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சியில், 2,000 ஹெக்டேருக்கு மேல் பாக்கு மரங்கள் காய்ந்து போயின. எஞ்சியிருக்கும், 30 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து மகசூல் கொடுத்து வயது முதிர்ந்த பாக்கு மரங்களிலும், மகசூல் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால்,

வயது முதிர்ந்த பாக்கு மரங்களை, பாக்கு மகசூல் பாதிக்காமல் அகற்றிட, அந்த மரங்களுக்கு அடியிலேயே புதிய பாக்குக்கன்றுகளை நடும், 'அடிக்கன்று' தொழில் நுட்பத்தை விவசாயிகள் பின்பற்றி வருகின்றனர். "மகசூல் குறைவதாக கண்டறியப்படும் முதிர்ந்த பாக்குத்தோப்புகளில் அடிக்கன்றுகளை நட்டு வளர்ப்பதால், 3 ஆண்டு கடந்ததும் புதிய மரங்களில் இருந்து மகசூல் துவங்கி விடுகிறது. அதன் பிறகு, முதிர்ந்த பாக்கு மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி விடுவதால், மகசூல் பாதிக்காமலேயே புதிய பாக்குத்தோப்பு உருவாகி விடுகிறது," என, மூத்த பாக்கு விவசாயி பழனிமுத்து தெரிவித்தார்.

## ரூ.35 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டையில், நேற்று நடந்த ஏலத்தில், 35 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் வர்த்தகம் நடந்தது. நாமகிரிப்பேட்டை ஆர்.சி.எம்.எஸ்.சில் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில், விரலி ரகம் அதிகபட்சமாக 100 கிலோ மூட்டை, 10 ஆயிரத்து, 509 ரூபாய், குறைந்தபட்சமாக, 7,269 ரூபாய்க்கும் விலை போனது. உருண்டை ரகம் அதிகபட்சமாக ரூ. 9,009க்கும் குறைந்தபட்சமாக ரூ. 6,542 க்கும் விற்பனையானது. பனங்காலி ரகம் அதிகபட்சம், 23 ஆயிரத்து, 809 ரூபாய், குறைந்தபட்சம், 11 ஆயிரத்துக்கும் ஏலம் போனது. விரலி, 450 மூட்டைகளும், உருண்டை, 200, பனங்காலி, 30 என மொத்தம், 680 மூட்டைகளும், 35 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த வாரம், 11 ஆயிரத்து, 569 ரூபாயக்கு விற்ற விரலி, நேற்று அதிகபட்சமாக, 10 ஆயிரத்து, 509 ரூபாயக்கு விற்பனையானது. மூட்டைக்கு சராசரியாக,1,000 ரூபாய் வரை குறைந்துள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

## மொத்தவிலை பண வீக்கம் அதிகரிப்பு



கடந்த மே மாதத்தில் மொத்த விலை பண வீக்கம் 0.79 சதவீதம் அதிகரித்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் இது 0.34 சதவீதம் உயர்ந்திருந்தது. கடந்த மாதத்தில் குறிப்பாக, உணவு விலை பண வீக்கம் 7.88 சதவீதம் உயர்ந்துள்ளது. இது ஏப்ரலில் 4.23 சதவீதமாக இருந்தது. காய்கறிகளில் அதிகபட்சமாக உருளைக்கிழங்கு 60.01 சதவீதம் அதிகரித்துள்ளது. இதுபோன்றே பருப்பு வகைகள் உட்பட சில முக்கிய உணவு பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது.

## ஒரு விவசாயிக்கு 4 முறை மட்டும்தான் அனுமதி கொப்பரை தேங்காய் கொள்முதல் நாளை தொடக்கம் விதிமுறைகளை வெளியிட்டு கலெக்டர் உத்தரவு

நாகர்கோவில், : குமரி மாவட்டத்தில் கொப்பரை தேங்காய் கொள்முதல் நாளை தொடங்கும் என்று கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் அறிவித்துள்ளார். தென்னை பயிரிடும் விவசாயிகளிடம் நடப்பு ஆண்டில் விலை ஆதரவு திட்டத்தின் கீழ் கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்ய

ஆணையிடப்பட்டுள்ளது. குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் உள்ள தோவாளை அகஸ்தீஸ்வரம் தாலுகா வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் அரவை கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.59.50க்கும், பந்து கொப்பரை ரூ.62.40க்கும் கொள்முதல் செய்யப்படவுள்ளது. இந்த திட்டம் நாளை (15ம் தேதி) முதல் 180 நாட்களுக்கு செயல்படுத்தப்படும்.

தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கொப்பரையை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தின் தேரூர் மற்றும் திங்கள் நகர் கிட்டங்கிகளுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லும் போது கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வேளாண் அலுவலர் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட தங்களது முகவரி, சர்வே எண், நிலப்பரப்பு, தென்னை பயிரிட்டுள்ள அளவு குறித்து அடையாளச் சான்றிதழ், தங்களது பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் சான்றிதழ் நகல்களுடனும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கணக்கு இருப்பின் அந்த வங்கி பாஸ்புத்தகத்தின் முதல் பக்க நகலுடனும் கண்டிப்பாக கொண்டு செல்ல வெண்டும்.

சம்பந்தப்பட்ட விவசாயி கொப்பரையை கொண்டு செல்ல இயலாவிடில் அவரது குடும்ப அட்டையிலுள்ள வயதுவந்த நபர் கொப்பரையை கொண்டு செல்லலாம். விவசாயிடமிருந்து ஒரு நாளில் அவரது ஆண்டு உற்பத்தியில் கால் பங்கு அல்லது 2500 கி.கி. இதில் குறைவான அளவு மட்டுமே கொள்முதல் செய்யப்படும். ஒரு கொள்முதலுக்கும் அடுத்த கொள்முதலுக்கும் இடையில் குறைந்தபட்சம் 45 நாட்கள் இருக்கவேண்டும்.

கொப்பரைக்கான தொகை விவசாயிக்கு மின்னணு கணக்கு பரிமாற்றம் மூலம் கோடிட்ட காசோலை மூலம் மூன்று நாட்களுக்குள் பட்டுவாடா செய்யப்படும் என்று மாவட்ட கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் அறிவித்துள்ளார். மொத்தம் 180 நாட்களுக்கு செயல்படுத்தப்படும் இந்த திட்டத்தில் 45 நாட்களுக்கு ஒருமுறைதான் ஒரு விவசாயிடம் இருந்து கொப்பரை கொள்முதல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் ஒரு விவசாயி இந்த திட்டத்தால் அதிகபட்சம் 4 முறை மட்டுமே கொப்பரை விற்பனை செய்ய முடியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

## 3 ஆண்டுகளுக்கு யூரியா விலை உயராது மத்திய மந்திரி தகவல்



பெர்காம்பூர்(ஒடிசா),

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 2 ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஒடிசா மாநிலம் பெர்காம்பூர் நகரில் நேற்று நடந்தது. இதில் சிவில் விமான போக்குவரத்து மந்திரி அசோக் கஜபதி ராஜு, மத்திய ரசாயன மற்றும் உரத்துறை ராஜாங்க மந்திரி ஹன்ஸ்ராஜ் கங்காராம் அஹிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக நிருபர்களுக்கு பேட்டி அளித்த ஹன்ஸ்ராஜ் கங்காராம் அஹிர் கூறியதாவது:–

மோடி தலைமையிலான மத்திய அரசு விவசாயிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு உள்ளது. இதற்காக பல்வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த 3 ஆண்டுகளுக்கு யூரியாவின் விலையை உயர்த்துவது இல்லை என்று மத்திய அரசு முடிவு செய்து இருக்கிறது. இதேபோல் அனைத்து வகை உரங்களும் தட்டுப்பாடு இன்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வேம்பு பூசப்பட்ட யூரியாவை பயன்படுத்த விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த வகை யூரியாவுக்கு முதலீடு குறைவு. அதேநேரம் அதிக விளைச்சல் கிடைக்கிறது.
இவ்வாறு அவர் கூறினார்.

**வரத்து குறைவால் தக்காளி ஒரு கிலோ ரூ.120 வரை விற்பனை**



சென்னை,

வரத்து குறைவால் தக்காளி விலை ‘கிடுகிடு’வென உயர்ந்து ஒரு கிலோ ரூ.80 முதல் ரூ.120 வரை விற்பனை ஆனது.

தக்காளி விலை உயர்வு

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த ஏப்ரல் மாத இறுதியில் ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.25 வரை விற்பனை செய்யப்பட்ட தக்காளி விலை கடந்த ஒரு மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டு வருகிறது.

கடந்த ஒரு வாரத்தை பொறுத்தவரையில் தக்காளி விலை ‘கிடுகிடு’வென உயர்ந்து வருகிறது. இதுகுறித்து சென்னை கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்தரராஜன் கூறியதாவது:-

ரூ.80 முதல் ரூ.120 வரை...

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து பாதிக்கு மேல் குறைந்துள்ளது. கர்நாடகா, ஆந்திரா மற்றும் தமிழகத்தில் ஓசூர், தேனி, பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் இருந்து நாளொன்றுக்கு 80 லாரிகளில் தக்காளி விற்பனைக்கு கொண்டு வரப்படும். தற்போது கோயம்பேடு மார்க்கெட்டுக்கு 40 லாரிகளில் தான் தக்காளி வருகிறது.

தேவை அதிகரித்து, வரத்து குறைவாக இருப்பதால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த வாரத்தை ஒப்பிடும்போது, கிலோவுக்கு ரூ.20 வரை உயர்ந்துள்ளது. மார்க்கெட்டில் இன்று (நேற்று) ரூ.70 முதல் ரூ.80 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதை வாங்கி செல்லும் வியாபாரிகள் வெளிமார்க்கெட்டில் ரூ.80 முதல் ரூ.120 வரை விற்பனை செய்கிறார்கள்.

ஆடிமாதம் தொடங்கும் வரை இதே நிலை நீடிக்கும். அதன் பின்பு விலை குறைவதற்கான வாய்ப்பு இருக்கிறது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் இன்று (நேற்று) விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் வருமாறு:-

விலை நிலவரம்

தக்காளி - ரூ.70 முதல் ரூ.80 வரை, பீன்ஸ் - ரூ.50 முதல் ரூ.60 வரை, கேரட் - ரூ.35 முதல் ரூ.40 வரை, பல்லாரி - ரூ.15 முதல் ரூ.20 வரை, உருளைக்கிழங்கு - ரூ.20, நூக்கல் - ரூ.25 முதல் ரூ.30 வரை, சவ்சவ் - ரூ.35, பீட்ரூட் - ரூ.35, கேரட் - ரூ.20, மிளகாய் - ரூ.50, இஞ்சி - ரூ.55, சேப்பக்கிழங்கு - ரூ.30, கத்தரிக்காய் - ரூ.10 முதல் ரூ.25 வரை, வெண்டைக்காய் - ரூ.25 முதல் ரூ.30 வரை, அவரைக்காய் - ரூ.40, கோவைக்காய் - ரூ.25 முதல் ரூ.30 வரை, கொத்தவரங்காய் - ரூ.30, சேனைக்கிழங்கு - ரூ.40, பாகற்காய் - ரூ.35 முதல் ரூ.40 வரை, சாம்பார் வெங்காயம் - ரூ.30 முதல் ரூ.40 வரை, காலிபிளவர் - ரூ.30, முருங்கைக்காய் - ரூ.40, முள்ளங்கி - ரூ.20, சுரைக்காய் - ரூ.20, பீர்க்கங்காய் - ரூ.30, புடலங்காய் - ரூ.30, தேங்காய் (காய் ஒன்று) - ரூ.15, வாழைக்காய் (காய் ஒன்று) - ரூ.6. இவ்வாறு அவர் கூறினார்.

## ஏற்காட்டில் நடப்பதாக இருந்த கோடைவிழா மலர்க்கண்காட்சி மீண்டும் ஒத்திவைப்பு



ஏற்காட்டில் நடப்பதாக இருந்த கோடைவிழா மலர்க்கண்காட்சி மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

முன்னேற்பாடுகள்

''ஏழைகளின் ஊட்டி'' என்றழைக்கப்படும் ஏற்காட்டில் ஆண்டுதோறும் மே மாதம் இறுதியில் சுற்றுலாத்துறை-தோட்டக்கலைத்துறை சார்பில் கோடை விழா மலர்க்கண்காட்சியுடன் நடத்தப்படுவது வழக்கம்.

இந்த ஆண்டு கடந்த 11-ந் தேதி, 12-ந் தேதி ஆகிய 2 நாட்கள் கோடைவிழா மற்றும் மலர்க்கண்காட்சி நடத்தப்படுவதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர் அந்த 2 நாட்களில் நடத்தப்படுவது தள்ளிப்போடப்பட்டு வருகிற 18-ந் தேதி(சனிக்கிழமை), 19-ந் தேதி(ஞாயிற்றுக்கிழமை) ஆகிய 2 நாட்கள் 41-வது கோடைவிழா-மலர்க்கண்காட்சி நடத்தப்படும் என்று கலெக்டர் சம்பத் அறிவித்தார். மேலும் அனைத்து அரசுத்துறை சார்பில் அதற்கான முன்னேற்பாடுகளும் நடந்து வந்தது.

2-வது முறையாக ஒத்திவைப்பு

கோடைவிழா- மலர்க்கண்காட்சி தொடக்கவிழாவில் தமிழக வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி, வேளாண்மைத்துறை அமைச்சர் ஆர்.துரைக்கண்ணு, சுற்றுலாத்துறை அமைச்சர் வெல்லமண்டி என்.நடராஜன் ஆகியோர் பங்கேற்பதாக செய்தி மக்கள் தொடர்பு துறைமூலம் அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டு அவை வினியோகிக்கும் பணியும் நடந்து வந்தது.

இந்த நிலையில் ஏற்காடு கோடைவிழா மற்றும் மலர்க்கண்காட்சி 2-வது முறையாக ஒத்தி வைக்கப்படுவதாக மீண்டும் அறிவிக்கப் பட்டுள்ளது.

காரணம் என்ன?

இது தொடர்பாக மாவட்ட கலெக்டர் சம்பத் நேற்று வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு ஒன்றில்,‘‘ஏற்காட்டில் வருகிற 18-ந் தேதி, 19-ந் தேதி ஆகிய 2 நாட்கள் நடக்க இருந்த கோடைவிழா மலர்க்கண்காட்சி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ஏற்காடு கோடைவிழா நடைபெறும் தேதி பின்னர் தெரிவிக்கப்படும்‘‘ என்று கூறப்பட்டுள்ளது.

அதாவது தொடக்க விழா நிகழ்ச்சியான 18-ந் தேதியன்று, அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் ஆகியோர் சென்னையில் நடைபெறும் வேறு ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர். எனவே, அன்றைய தினம் அவர்களால் பங்கேற்க முடியாது என்பதால் கோடை விழா ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் வட்டாரத்தில் கூறப்பட்டது.

## நெல்லை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் தேதி மாற்றம்



நெல்லை,

நெல்லை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஒவ்வொரு ஆங்கில மாதம் 3–வது வெள்ளிக்கிழமை நடைபெறுவது வழக்கம். இந்த மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 17–ந் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெறுவதாக இருந்தது. சில நிர்வாக காரணங்களை முன்னிட்டு அந்த கூட்டம் தள்ளிவைக்கப்படுகிறது. இந்த கூட்டம் வருகிற 24–ந் தேதி (வெள்ளிக்கிழமை) கலெக்டர் தலைமையில் கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறுகிறது. இந்த தகவலை கலெக்டர் மு.கருணாகரன் தெரிவித்து உள்ளார்.